தும்பி

சிறார் மாத இதழ்

83

English • தமிழ்

Thumbi - Children's Monthly Magazine

“ஒவ்வொரு குழந்தையும் தனித்துவமான
படைப்புள்ளம் கொண்டவர்கள்.”

-பாப்லோ பிக்காசோ

ஃபிரடெரிக்

லியோ லியோனி

தமிழில் : கவிஷ், காக்கை காளி

Frederick

Leo Lionni



தும்பி

சிறார் மாத இதழ்
ஜூலை 2025

இதழ் வடிவமைப்பு : கல்ஆல்

கதைத்தேர்வு : ஸ்ரீஹன்

அட்டை ஒளிப்படம் : மோகன் தனிஷ்க்

ஒளிப்படங்கள் : இரா. தியாகராஜன்

ஆசிரியர் : சிவராஜ்

தொடர்புக்கு :
குக்கூ
ஜவ்வாது மலை அடிவாரம், புளியானூர் கிராமம்,
சிங்காரப்பேட்டை - 635 307
கிருஷ்ணகிரி மாவட்டம்,
பேச : 9843870059
thumbigal@gmail.com
fb: thumbi4children
www.thumbigal.com

For Private
Circulation Only

பிரார்த்தனை ...

பச்சோந்திகளுக்கு ...

நன்றியும் ப்ரியமும் ...

வாண்டு மாமா குடும்பத்தினருக்கு ...

பசுக்கள் மேய்ந்தும், குதிரைகள் ஓடியும் திரிந்த புல்வெளி நீளத்துக்கும்,
பழைய நீண்ட கல்சுவர் ஒன்று இருந்தது.

All along the meadow where the cows grazed and the horses ran,
there was an old stone wall.



தொழுவத்துக்கும் விதைக் கூடத்துக்கும் அருகில் இருந்த அந்தச் சுவற்றில், எப்போதும் அரட்டை அடித்துக் கொண்டிருக்கும் வயல் எலிகளின் குடும்பம் ஒன்று இருந்தது.

In that wall, not far from the barn and the granary,
a chatty family of field mice had their home.

ஆனால் அங்கிருந்த விவசாயிகள் வேறு இடம் சென்றுவிட்டதனால், விதைக் கூடம் காலியாகி, தொழுவம் வெறிச்சோடி இருந்தது. குளிர் காலம் வெகு தொலைவில் இல்லை என்பதால் சோளம், பருப்புகள், கோதுமை, வைக்கோல் முதலியவற்றை எலிகள் சேகரிக்கத் தொடங்கினர். அவர்கள் அனைவரும் இரவும் பகலும் உழைத்தனர்.
ஃபிரடெரிக்கைத் தவிர!

But the farmers had moved away, the barn was abandoned, and the granary stood empty. And since winter was not far off, the little mice began to gather corn and nuts and wheat and straw. They all worked day and night.
All except Frederick.

"ஃபிரடெரிக், நீ ஏன் வேலை செய்யாமல் இருக்கிறாய்?" என மற்ற எலிகள் கேட்டனர்.
"நான் வேலை செய்துகொண்டுதானே இருக்கிறேன்.
இருண்ட குளிர்கால நாட்களுக்காக நான் சூரியக் கதிர்களைச்
சேகரித்துக் கொண்டிருக்கிறேன்" என்றான் ஃபிரடெரிக்.

"Frederick, why don't you work?" they asked.
"I do work," said Frederick.
"I gather sun rays for the cold dark winter days."

ஃபிரடெரிக் அங்கே உட்கார்ந்து புல்வெளியை வெறித்துப் பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டு,
"இப்போது என்ன செய்கிறாய், ஃபிரடெரிக்?" என்று கேட்டனர்.
"நான் வண்ணங்களைச் சேகரிக்கிறேன். ஏனெனில், குளிர்காலம் நிறங்கள் இல்லாதது" என்றான் ஃபிரடெரிக்.

And when they saw Frederick sitting there, staring at the meadow, they said,
"And now, Frederick?" "I gather colors," answered Frederick simply.
"For winter is gray."

ஒருமுறை, ஃபிரடெரிக் அரைத் தூக்கத்தில் இருந்தான்.
"நீ என்ன கனவு காண்கிறாயா, ஃபிரடெரிக்?" எனக் கேட்டனர்.
ஆனால் ஃபிரடெரிக்கோ, "இல்லை, நான் வார்த்தைகளை சேகரிக்கிறேன்.
குளிர்கால நாட்கள் நீண்டது.
நம்மிடம் பேசுவதற்கு ஒன்றும் இல்லாமல் போகும்." என்று சொன்னான்.

And once Frederick seemed half asleep.
"Are you dreaming, Frederick?"
they asked reproachfully. But Frederick said,
"Oh no, I am gathering words.
For the winter days are long and many,
and we'll run out of things to say."



குளிர்காலம் வந்தது. முதல் பனித்துளிகள் விழுந்தபோது,
அந்த ஐந்து சிறு எலிகளும் கல்லின் இடுக்குகளில்
புகுந்து கொண்டனர்.

The winter days came,
and when the first snow fell the five little field mice
took to their hideout in the stones.

ஆரம்பத்தில் அவர்களிடம் நிறைய உணவுகள் இருந்தன.
அவர்கள் முட்டாள் நரிகள் பற்றியும், மக்குப் பூனைகள் குறித்தும்
கதைகள் பேசினர். மகிழ்ச்சியாக இருந்தனர்.

In the beginning there was lots to eat,
and the mice told stories of foolish foxes and silly cats.
They were a happy family.



ஆனால் நாட்கள் செல்லச் செல்ல, பருப்புகள், பழங்கள் எல்லாம் தின்று தீர்ந்தன.
வைக்கோல் காலியானது, சோளம் நினைவில் மட்டுமே எஞ்சியது.
சுவரின் உள்ளே குளிர் அதிகமானது. அவர்கள் ஒருவருக்கொருவர்
பேசிக்கொள்ளக்கூட மனமின்றி இருந்தனர்.

But little by little they had nibbled up
most of the nuts and berries,
the straw was gone, and the corn was only a memory.
It was cold in the wall and no one felt like chatting.



அப்போதுதான் அவர்களுக்கு ஃபிரடெரிக் கூறியது நினைவுக்கு வந்தது–
சூரியக் கதிர்கள், நிறங்கள், வார்த்தைகள். "ஃபிரெடரிக், நீ சேகரித்ததைப்
பற்றி எங்களுக்குச் சொல்!"

Then they remembered
what Frederick had said about sun rays and colors and words.
"What about your supplies, Frederick?" they asked.

"கண்களை மூடுங்கள். நான் உங்களுக்குச் சூரியனின் வெப்பத்தை அனுப்புகிறேன்.
நீங்கள் அதன் தங்க நிற ஒளியை உணர்கிறீர்களா?" என்றான் ஃபிரடெரிக்.
அவன் பேசும்போது, மற்ற நான்கு எலிகளும் சிறிது சூடாக உணரத் தொடங்கினார்கள்.
அது ஃபிரடெரிக்கின் குரலா? அல்லது மந்திரமா?

"Close your eyes," said Frederick, as he climbed
on a big stone. "Now I send you the rays of the sun.
Do you feel how their golden glow..."
And as Frederick spoke of the sun the four little mice
began to feel warmer.
Was it Frederick's voice? Was it magic?

"ஃபிரடெரிக், நிறங்களைப் பற்றி சொல்". "மறுபடியும் கண்களை மூடுங்கள்" என்றான் ஃபிரடெரிக்.
அவன் நீலநிற நித்திய கல்யாணி மலர்கள், சிவப்பு நிற பாப்பி பூக்கள்,
மஞ்சள் கோதுமை வயல்கள், பெர்ரி கொடிகளின் பசுமையான இலைகள் பற்றி
விவரிக்கத் தொடங்கினான். மற்ற எலிகள் அவற்றை நேரில் பார்த்தது போலவே உணர்ந்தன.

"And how about the colors, Frederick?"
they asked anxiously.
"Close your eyes again," Frederick said.
And when he told them of the blue periwinkles,
the red poppies in the yellow wheat,
and the green leaves of the berry bush,
they saw the colors as clearly
as if they had been painted in their minds.



ஃபிரடெரிக், "அப்போது வார்த்தைகள்?"
ஃபிரடெரிக் தன் குரலைப் பாடுவதற்காக
சற்று சரிசெய்து, ஒரு நொடிக்குப் பிறகு,
மேடையில் நிற்பது போல்
நின்று பாடத் தொடங்கினான்:

"And the words, Frederick?"
Frederick cleared his throat,
waited a moment, and then,
as if from a stage, he said:

ஃபிரடெரிக் பாடி முடித்ததும், மற்ற எலிகள் ஆரவாரத்துடன் கைத்தட்டினார்கள்.
"நீ ஒரு கவிஞன் ஃபிரடெரிக்!" என்றனர்.

"பனியைப் பொழிவது யாரு? அந்தப் பனியைப் பொழிவது யாரு? யாரு? யாரு?
வானிலையை கிடுகிடுத்தது யாரு? அதை அழகாக மாற்றியது யாரு? கூறு ... கூறு ... கூறு ...
நாலு இலைக் கொண்ட செடியை ஜூலையில் வளர்ப்பது யாரு? அது யாரு? யாரு? யாரு?
பகலை இருட்டாய் ஆக்கியது யாரு? நிலவை ஒளிரச் செய்வது யாரு? நீ கூறு ... கூறு ... கூறு ...
வானத்தில் வாழுது சிறுவயல் எலிகள், பாரு ... பாரு ... பாரு ...
உன்னைப் போல என்னைப் போல நான்கு சிறு வயல் எலிகள், நல்லாப் பாரு ... பாரு ... பாரு ...
மழையைக் கொண்டுவரும் மழை எலி
பூக்களுக்கு நிறத்தைக் கொடுக்கும் கோடை எலி, ஜோரு ... ஜோரு ... ஜோரு ...
முந்திரியும் கோதுமையும் தரும் இலையுதிர்கால எலி
இறுதியாக கால் நடுங்க வரும் குளிர்கால எலி, ஜோரு ... ஜோரு ... ஜோரு ...
நான்கு காலங்களைப் பெற்ற நாம்தான் கொடுத்து வைத்தவர் இல்லையா? வேறு யாரு கூறு ...
ஒன்று போய் ஒன்று இருக்கும் ஒரு வருடம் வந்தால் என்னவாகும்? பாரு ... பாரு ... பாரு ..
நல்லா யோசிச்சுப் பாரு ... பாரு ... பாரு ..."

"Who scatters snowflakes? Who melts the ice?
Who spoils the weather? Who makes it nice?
Who grows the four-leaf clovers in June?
Who dims the daylight? Who lights the moon?
Four little field mice who live in the sky.
Four little field mice... like you and I.
One is the Spring mouse who turns on the showers.
Then comes the Summer who paints in the flowers.
The Fall mouse is next with walnuts and wheat.
And Winter is last... with little cold feet.
Aren't we lucky the seasons are four?
Think of a year with one less ... or one more!"



When Frederick had finished, they all applauded. "But Frederick,"
they said, "you are a poet!"

ஃபிரடெரிக் மகிழ்ச்சியில் முகம் சிவந்து,
தலை வணங்கி, "எனக்குத் தெரியும்"
என்று பணிவுடன் சொன்னான்.

Frederick blushed, took a bow,
and said shyly, "I know it."

அன்புமிக்க
புதிய உலகத்திற்குள்...

தி கிரேட் டிக்டேட்டர் திரைப்படத்தின் இறுதிக் காட்சியில்
சார்லி சாப்ளின் பேசும் உரை ...

தமிழில் : விஸ்வாமித்திரன்

''என்னை மன்னித்துவிடுங்கள். நான் பேரரசனாக விரும்பவில்லை. அது என்னுடைய வேலையுமல்ல. எவரொருவரையும் அதிகாரம் செய்யவோ அல்லது அடிபணியச் செய்யவோ நான் விரும்பவில்லை. மாறாக, நான் அனைவருக்கும் உதவவே விரும்புகிறேன். முடியும் பட்சத்தில், யூதர்களுக்கும் கருப்பர்களுக்கும் வெள்ளையர்களுக்கும் உதவவே விரும்புகிறேன்.

நாம் அனைவரும் ஒருவருக்கொருவர் உதவவே விரும்புகிறோம். மனிதர்கள் என்பவர்களே அத்தகையவர்கள்தான். நாம் அனைவரும் ஒருவருக்கொருவர் மகிழ்ச்சியையே பகிர்ந்து வாழவிரும்புகிறோம், சோகங்களை அல்ல. ஒருவர் மற்றவரை வெறுப்பதையும் தாழ்வாகப் பார்ப்பதையும் நாம் விரும்பவில்லை.

இந்த உலகத்தில் அனைவருக்கும் இடம் இருக்கிறது. இந்த சிறந்த உலகம் வளம் மிக்கது. அனைவரின் தேவையையும் பூர்த்திசெய்ய வல்லது. வாழ்வின் பாதை என்பது அழகானதாகவும் சுதந்திரமானதாகவும் இருக்க முடியும். நாம்தான் அதை இழந்து விட்டிருக்கிறோம். மனித ஆன்மாவில் பேராசை விஷத்தைக் கலந்துவிட்டிருக்கிறது; இந்த உலகத்தை வெறுப்பால் அடைகாத்திருக்கிறது; இரத்தம் சிந்துதலுக்கும் துன்புறுத்துவதற்கும் நம்மை உட்படுத்தி இருக்கிறது.

நாம் வேகமாக வளர்ச்சி கண்டிருக்கிறோம். ஆனால் நமக்கு உள்ளேயே முடங்கியும் போய்விட்டிருக்கிறோம் ஆனால் இயந்திரமயம் என்பது நம்மை மேலுமான விருப்பத்தில் கொண்டுபோய் தள்ளிவிட்டது. நமது அறிவு நம்மை எரிச்சல் மிக்கவர்களாக மாற்றிவிட்டது. நமது புத்திசாலித்தனம் இறுக்கமானவர்களாகவும் நேசமற்றவர்களாகவும் நம்மை மாற்றிவிட்டது.

அதிகமாக சிந்திக்கிறோம். ஆனால் குறைவாகவே உணர்வு வயப்படுகிறோம். இயந்திரமயத்தைவிட மனித நேயமே நமது தேவை. புத்திசாலித்தனத்தைவிட அன்பும், மென்மையுமே நமது தேவை. இந்தப் பண்புகள் இல்லா விட்டால், வாழ்வு வன்முறையானதாக மாறிவிடும். அனைத்தும் அழிந்துபோகும்.

ஒரு புதிய உலகிற்காக போரிடுவோம்! அது ஒரு நாகரீகமான உலகம்! அது மனிதர்களுக்கு பணியாற்றும் வாய்ப்பை அளிக்கும். இளைஞர்களுக்கு வளமான எதிர்காலத்தைஅளிக்கும். வயதானவர்களுக்கு பாதுகாப்பை அளிக்கும். விமானமும் வானொலியும் நம்மை நெருக்கப்படுத்தியிருக் கிறது. இந்தக்கண்டுபிடிப்புகளின் நோக்கம் மனிதர்களிடம் நல்ல பண்பைக்கொண்டுவருவதற்கும், உலகளாவிய சகோதரத்துவத்தை உருவாக்குவதற்கும், நாம் ஒன்றிணைவதற்குமானது.

இப்போதுகூட எனது பேச்சு இலட்சக்கணக்கான மக்களை அடைந்துகொண்டிருக்கிறது. இலட்சக்கணக்கான நம்பிக்கை யற்றிருக்கிற ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் மற்றும் அரசியல், சமூக அமைப்பால்கொடுமைப்படுத்தப்பட்ட, சிறைவைக்கப்பட்ட அப்பாவி மக்களை அடைந்து கொண்டிருக்கிறது. எனது பேச்சைக் கேட்டுக் கொண்டிருக்கும் இவர்களுக்குச் சொல்கிறேன்; அவநம்பிக்கை கொள்ளாதீர்கள்!

இப்போது துன்பம் நம்மீது கவிந்திருக்கிறது. ஆனால் பேராசை விலகிக் கொண்டிருக்கிறது. மனித வளர்ச்சிக்குத் தடையாக இருக்கிற மனக்கசப்பு விலகிவிடும். மனிதர் மீதானவெறுப்பு அகன்றுவிடும்.

சர்வாதிகாரிகள் இறந்து போவார்கள். மக்களிட மிருந்து பறிக்கப்பட்ட அதிகாரம் திரும்பவும் மக்களுக்கே வந்துசேரும். மனிதகுலம் அழிந்துபோனாலும் சுதந்திரம் என்பது ஒரு போதும் அழியாது. வீரர்களே! உங்களை நிந்திக்கிற, உங்களை அடிமைப்படுத்துகிற, நீங்கள் என்ன செய்யவேண்டும், என்ன நினைக்கவேண்டும், என்ன உணர வேண்டும் என்று உங்களை நிர்ப்பந்திக்கிற சர்வாதிகாரிகளுக்கு அடிபணிந்துவிடாதீர்கள்!

நீங்கள் என்ன உண்ணவேண்டுமெனத் தீர்மானிக்கிற, உங்களை கால்நடைகளைப் போல பாவித்து பழகியிருக்கிறவர்களே உங்களை பீரங்கிக் குண்டுகளாக பயன்படுத்திக் கொள்பவர்கள், அத்தகைய இயந்திர இதயமும் இயந்திர மூளையும் கொண்ட இயந்திர மனிதர்களுக்கு, இயற்கைக்கு விரோதமான மனிதர்களுக்கு அடிபணிந்துவிடாதீர்கள். நீங்கள் யாரும் இயந்திரமல்ல; கால்நடைகளுமல்ல. நீங்கள் மனிதர்கள். உங்கள் இதயத்தில் மனித நேசிப்பைப் பெற்றவர்கள்.

யாரையும் வெறுக்காதீர்கள். அன்பில்லாதவர்களும் இயற்கைக்கு விரோதமானவர்களும் மாத்திரமே வெறுப்பார்கள். வீரர்களே! அடிமை ஆவதற்கு போரிடாதீர்கள். சுதந்திரமடைவதற்குப் போரிடுங்கள்.

துறவி லுக்கின் புத்தகத்திலுள்ள பதினேழாம் அத்தியாயம் கூறுவதைப் போல, கடவுளின் அரசாங்கம் மனிதருக்குள்தான் உள்ளது. ஒரு தனிமனிதனிடம் அல்ல; ஒரு குழுவினரிடமும் அல்ல; எல்லா மனிதர்களிடமும் இருக்கிறது. உங்களிடம் இருக்கிறது. மக்களாகிய நீங்கள் அதிகாரத்தைப் பெற்றிருக்கிறீர்கள். இயந்திரங்களை உருவாக்கும் அதிகாரத்தைப் பெற்றிருக்கிறீர்கள். மகிழ்ச்சியை உருவாக்கும் அதிகாரத்தைப் பெற்றிருக்கிறீர்கள். வாழ்வை அழகானதாகவும் சுதந்திரமான தாகவும் உருவாக்கும் அதிகாரத்தைப் பெற்றிருக்கிறீர்கள். வாழ்வை துணிவுமிக்க அனுபவமாக மாற்றும் அதிகாரத்தைப் பெற்றிருக்கிறீர்கள்.

ஜனநாயகத்தின் பெயரால் அந்த அதிகாரத்தைப் பயன் படுத்துவோம். எல்லா மனிதருக்கும் பணியாற்றும் வாய்ப்பைத் தருகின்ற, இளைஞர்களுக்கு வளமான எதிர்காலத்தைத் தருகின்ற, முதியவர்களுக்கு பாதுகாப்பைத்தருகின்ற ஒரு நாகரீகமான புதிய உலகிற்காக நாம் ஒன்றிணைந்து போரிடுவோம்.

இத்தகைய உறுதிமொழிகளைத் தந்துதான், கொடுமைக்காரர்கள் அதிகாரத்தைப் பெருக்கிக் கொண்டார்கள். ஆனால் அவர்கள் பொய்யைத்தான் நம்மிடம் சொன்னார்கள். உறுதிமொழிகளை அவர்கள் நிறைவேற்றவில்லை. ஒருபோதும் நிறைவேற்றவும் மாட்டார்கள்.

சர்வாதிகாரிகள் தம்மை சுதந்திரப்படுத்திக்கொண்டு மக்களை அடிமைப்படுத்தி விட்டார்கள். இப்போது அந்த உறுதி மொழிகளை நிறைவேற்ற நாம் போரிடுவோம். பேராசை, வெறுப்பு, சகிப்பின்மை விரட்டியடிக்கப்படவும், நாட்டின் எல்லைகள் விலக்கம் பெறவும், உலகிற்கே சுதந்திரமளிக்கவும் நாம் போரிடுவோம். ஒரு லட்சிய உலகத்திற்காக நாம் போரிடுவோம்.

அறிவியல் வளர்ச்சியும், முன்னேற்றமும் இணைந்து அனைத்து மக்களையும் மகிழ்ச்சிக்கு இட்டுச் செல்லக்கூடிய உலகிற்காக நாம் போரிடுவோம். வீரர்களே! ஜனநாயகத்தின் பெயரால் நாம் அனைவரும் ஒன்றிணைவோம்!

ஹென்னா! எனது பேச்சைக் கேட்டுக்கொண்டிருக்கிறாயா? நீ எங்கே இருந்தாலும், நிமிர்ந்து பார்! மேகங்கள் விலகிக் கொண்டிருக்கின்றன. கதிரவன் உதயமாகிக் கொண்டிருக்கிறான். இருளிலிருந்து வெளியேறி வெளிச்சத்திற்குள் நாம் சென்றுகொண்டிருக்கிறோம். மனிதர்கள் வெறுப்பையும், பேராசையையும், வன்முறையையும் துறந்த அன்புமிக்க உலகிற்குள், ஒரு புதிய உலகிற்குள் நாம் சென்று கொண்டிருக் கிறோம்.

நிமிர்ந்து பார் ஹென்னா! மனித ஆன்மாவிற்கு இறக்கைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. இறுதியில் அவன் பறக்கத் தொடங்கியிருக்கிறான். வானவில்லுக்குள்ளும், நம்பிக்கை கீற்றுக்குள்ளும், நீயும் நானும் அனைவரும் கூடியிருக்கிற அற்புதமான எதிர்காலத்திற்குள்ளும் ஊடுறுவிச் செல்கிறான். நிமிர்ந்து பார் ஹென்னா! நிமிர்ந்து பார்!''

உரையை தனது இல்லத்திலிருந்து கேட்டுக்கொண்டிருக்கும் ஹென்னாவின் உள்ளத்தில் சோகம் மறைந்து ஒளி படர்கிறது.

●



மாறுதல் என்பது
சொல் அல்ல செயல்,
போர் அல்ல அமைதி,
துப்பாக்கி ரவைகள் அல்ல விதைகள்,
குழந்தைகளின் கைகளிலுள்ள விதைகளின் பச்சையமே அது.

- முமியா அபுஜமால்

குயில் பாடும் பாட்டை மொழிபெயர்த்துக் கேட்கணும்,
அந்த மயில் ஆடும் ஆட்டத்தை மேடைப் போட்டு பாக்கணும்,
அலை போடும் தாளத்துக்கு சுதிக்கூட்டி பாடணும்,
விசில் அடிக்க காத்து எந்த விரல் மடிக்குது கேட்கணும்;

குயில் பாடும் பாட்டை மொழிபெயர்த்துக் கேட்கணும்,
அந்த மயில் ஆடும் ஆட்டத்தை மேடைப் போட்டு பாக்கணும்;

கொட்டும் மழைச்சாரல் கீற்றை எட்டி எட்டிப் பிடிக்கணும்,
அதில் சுட்டிப் பையன் கணக்கா ஊஞ்சல் கட்டி ஆடணும்,
வானவில்லை தொட்டு தொட்டு வண்ணங்கள் தீட்டணும்,
என் எண்ணம் எனும் கனவுக்கும் வண்ண முலாம் பூசணும்,
என் எண்ணம் எனும் கனவுக்கும் வண்ண முலாம் பூசணும்;

குயில் பாடும் பாட்டை மொழிபெயர்த்துக் கேட்கணும்,
அந்த மயில் ஆடும் ஆட்டத்தை மேடைப் போட்டு பாக்கணும்;

கூச்சலிடும் மரக்கிளையை குச்சி காட்டி மிரட்டணும்,
கூச்சலிடும் மரக்கிளையை குச்சி காட்டி மிரட்டணும்,
அது கலகலன்னு சிரிக்கும் அழகை கண்டு மனம் ரசிக்கணும்,
அது கலகலன்னு சிரிக்கும் அழகை கண்டு மனம் ரசிக்கணும்;

முள்ளு மர நிழல் படுக்கை, புரண்டு படுத்தும் குத்தல,
அந்த சப்பாத்தி பழம் அப்படி செவக்குதே எப்ப போட்டுச்சு வெத்தல,
அந்த சப்பாத்தி கள்ளி அப்படி செவக்குதே எப்ப போட்டுச்சு வெத்தல;

எச்சத்தாலே இயற்கையை வளர்க்குது பறவைகள்,
இனமோடு சேர்ந்து வாழ கற்றுத்தருது மிருகங்கள்,
கல்லெறிந்த போதும் கனி கொடுக்குது மரங்கள்,
என் கண் முன்னே இவை தான் கண்கண்ட தெய்வங்கள்,
என் கண் முன்னே இவை தான் கண்கண்ட தெய்வங்கள்,
நான் கண்கண்ட தெய்வங்கள்...

- வையம்பட்டி முத்துசாமி

தமிழ்ச்சுரங்கம் பதிப்பகம்